# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

## STC No.38/2023

நாள்.12.02.2026 எ.த.சா.1 திரு.ஜெபரோஸ் பிளஸ்லின்

க/பெ திரு.ரூபன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை

1) எனது மற்றும் எனது கணவரின் சொந்த ஊர் யாக்கோபுரம் என்றால் சரிதான். புகார்தாரர் அசோக் என்பவரின் தாயர் வீடு எங்கள் வீட்டிற்கு பின்புறம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. புகார்தாரர் உடைய தாயார் வீடு எங்கள் வீட்டிற்கு அருகில் தான் உள்ளது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எ.த.சா.ஆ.5 கல்லூரி சான்றிதழ் ஆகும், அது மட்டுமே தாக்கல் செய்துள்ளேன், பள்ளி சான்றிதழ் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் படித்தது பாலையா மார்த்தாண்டம் பள்ளி என்றால் சரிதான், எனது கணவர் வடக்கன்குளம் பள்ளியில் படித்தார். இவ்வழக்கு புகார்தாரர் பாலையா மார்த்தாண்டம் பள்ளியில் தான் படித்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கு காலகட்டத்தில் எனது கணவர் யாக்கோபுரத்தில் செல்போன் கடை நடத்தி வந்தார் என்றால் எங்கள் திருமணத்திற்கு முன்பு நடத்தி வந்தார்.

2) புகார்தாரர் எனக்கு அனுப்பி வழக்கறிஞர் அறிவிப்பை பற்றி தபால்காரர் மூலம் தொலைபேசி ஏதும் வந்ததா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் ம.த.சா.ஆ.5 தபால் அட்டையில் உள்ள தொலைபேசி எண்கள் யாருடையது என்றால் இரண்டாவது தொலைபேசி எண் எனது கணவருடையது, மற்ற தொலைபேசி எண் யாருடையது என்று எனக்கு தெரியாது. நானும் எனது கணவரும் ஒரே வீட்டில் தான் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். எனது கணவருக்கு தபால் வந்ததாகவோ தொலைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டது என்பதை எனது கணவர் என்னிடம் கூறினாரா என்றால் இல்லை. மேற்படி அறிவிப்பு அனுப்பப்பட்ட காலத்தில் நான் எந்த ஊரில் இருந்தேன் என்றால் காவல் கிணறு ஊரில் இருந்தேன்.

2) என்னிடம் காட்டப்படும் ம.த.சா.ஆ.1 காசோலை ஆனது எனது வங்கி கணக்கில் உள்ள காசோலை தான் என்றால் சரிதான். எனது வங்கி கணக்கு எண் தெரியுமா என்றால் ஞாபகம்



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2026.02.12 15:35:53 +0530

இல்லை. வங்கி கணக்கு திறக்கும் சமயம் எந்த முகவரி கொடுத்தேன் என்றால் எனது சித்தப்பா வீட்டு முகவரி கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் ம.த.சா.ஆ.1 காசோலையில் உள்ள கையொப்பம் யாருடையது என்றால் என்னுடையது. இவ்வழக்கில் ஆஜராகும் சமயம் இவ்வழக்கில் உள்ள ஆவணங்கள் நகல் எனக்கு கொடுக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ம.த.சா.ஆ.2 ரிட்டன் மெமோவில் வங்கி கணக்கு மூடப்பட்டுள்ளது என்று தான் காசோலை திருப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3) எனது வங்கி கணக்கு என்ன காரணத்திற்கு மூடப்பட்டது என்றால் நான் கல்லூரியில் படிக்கும் போது திறந்த வங்கி கணக்கு ஆகும், நாளடைவில் பயன்படுத்தாமல் விட்டதால் வங்கி கணக்கு மூடப்பட்டது. எனது திருமணத்திற்கு பிறகு மேற்படி வங்கி கணக்கில் வரவு செலவு வைத்துள்ளேனா என்றால் வைக்கவில்லை.

4) நான் தாக்கல் செய்துள்ள எ.த.சா.ஆ.1 புகார் மனுவானது எங்கு வைத்து எழுதப்பட்டது அல்லது தயாரிக்கப்பட்டது என்றால் அது எனது கணவருக்கு மட்டும் தான் தெரியும். நான் எ.த.சா.ஆ.1 புகார்மனு எழுதும்போது உடன் இல்லை என்றாலும், விசாரணைக்கு ஆஜாராகவில்லை என்றால் சரிதான். மேற்படி எ.த.சா.ஆ.1 புகார்மனுவை குறியீடு செய்ய எனக்கு அதிகாரம் இல்லை என்றாலும், அதனால் மேற்படி புகார் மனு ஏற்புடையது அல்ல என்றாலும் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் எ.த.சா.ஆ.2 புகார்மனுவின் இரசீது மனுவின் சாரம்சம் பணம் கொடுக்கல் வாங்கல் பிரச்சனை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5) எங்கள் குடும்பத்திற்கு எவ்வளவு கடன் உள்ளது என்றால் கடன் ஏதும் இல்லை. என்னிடம் காட்டப்படும் எ.த.சா.ஆ.4 வாகன கிரைய ஒப்பந்தத்தில் விற்பனை விவர பகுதியில் Sharon Cars and auto consulting அதன் உரிமையாளர் ஜெ.ஜேக்கப் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி எ.த.சா.ஆ.4 கிரைய ஒப்பந்தத்தில் வாகனம் வாங்குபவர் இடத்தில் எனது கணவர் பெயர் உள்ளது என்றால் சரிதான். மேற்படி எ.த.சா.ஆ.4 வாகன கிரைய ஒப்பந்தத்தில் புகார்தாரர் பெயரோ அல்லது எனது பெயரோ இல்லை என்றால் சரிதான். அதனால் எ.த.சா.ஆ.4 வாகன கிரைய ஒப்பந்தம் இவ்வழக்கிற்கு சம்மந்தமற்ற ஆவணம் என்றாலும் தேவையற்ற ஆவணம் என்றாலும் சரியல்ல.



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2026.02.12 15:35:58 +0530

6) புகார்தாரரும் நானும் ஒரே பள்ளியில் பயின்றவர் அதனால் நல்ல பழக்கவழக்கம் உடையவர் என்றாலும் அதனால் பள்ளி சான்றிதழை தாக்கல் செய்யாமல் கல்லூரி சான்றிதழை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் எ.த.சா.ஆ 3 ஆவணம் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் எனது கணவருக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் என்றுதான் குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் எ.த.சா.ஆ.3 ஆவணத்தில் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தகவல்கள் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர பழவூர் உதவி ஆய்வாளர் கையொப்பமோ, ஆய்வாளர் கையொப்பமோ அல்லது அதிகாரிகள் கையொப்பம் ஏதுவும் இல்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் எ.த.சா.ஆ.3 ஆவணத்தில் கடைசி பக்கத்தில் Scanned with OKEN Scanner என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் எ.த.சா.ஆ.3 ஆவணம் செல்போனில் புகைபடம் எடுக்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். மேற்படி எ.த.சா.ஆ.3 ஆவணமானது எனது கணவர் பெயரில் வழங்கப்பட்ட ஆவணம் என்பதாலும் அதில் உண்மை தன்மை இல்லை என்பதாலும் ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்களை குறியீடு செய்யும்போது புகார்தாரர் வழக்கறிஞருக்கோ அல்லது புகார்தாரருக்கோ ஆவணங்கள் நகல் வழங்கப்படவில்லை என்றால் அது பற்றி தெரியாது.

(புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

MITHUNA A KAISER

Digitally signed by MITHUNA A KAISER
Date: 2026.02.12 15:36:02 +0530